ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கில ஹூ வைகாசிமீ பகுதி ௫.

Vol 6. *May & June 1929.* No. 5.

தீர்க்க சரணாகதி.

ப்ரபந்நரா யிருப்பாரனைவர்க்கும் நித்யாநுஸந்தேயமாயிருப்பது த்வயமந்த்ரமாம். இதை மந்த்ரரத்நமென்று வழங்குவர். நமது ஸம்ப்ரதாயத்தின் ஸித்தாந்த ஸாரார்த்தம் இதிற்பொதிந்துள்ளதினால் இம்மந்த்ரத்தை நம்பூர்வாசார்யர்கள் தமக்குத் தஞ்சமாக அநுஸந்தித்தும் பிறருக்குபதேசித்தும் போந்தார்கள். இதை விஷ்ணுலோகத்தில் எம்பெருமான் தன் தேவியாகிய பெரிய பிராட்டியாரைக்குறித்து உபதேசித்தானென்பது இது வெளிவந்த வரலாறும்.

சரணாகதி என்றது த்வயத்தை. இது சரண, ஆகதி என்று இரண்டு பதமாம். இதன்பொருளாவது உபாயமாக வடைதல் என்பதாம். இங்கு உபசாரத்தால் சரணாகதியைத் தெரிவிக்கின்ற மந்த்ரத்தைச் சரணாகதி யென்று வழங்கலாயிற்று. தீர்க்கசரணாகதியாவது திருவாய்மொழியாம். இது, த்வயத்தின் விவரணமாயும், த்வயத்தைக்காட்டிலும் எத்துணையோ மடங்கு அதிகமாக ஆயிரம் பாசுரங்களையுடையதாயிருப்பதாலும், எம்பெருமானுக்குப் பரம போக்யமாயிருப்பதாலும் இது, தீர்க்கசரணாகதி என்று வழங்கப் பெற்றது.

விவரணமாவது ஒன்றிற் கூறப்பட்டதைத் தெளிவாகவுரைப்பதோடு அதிற் சொல்லப்படாததையும் அதற்குப் பொருத்தமாக

எடுத்துரைப்பதாம். திருவாய்மொழி த்வயத்தின் விவரணமானால் விவரணத்தின் இலக்கணம் இதிற்பொருந்தி யிருத்தல்வேண்டும். திருவாய்மொழியில் இவ்விலக்கணம் பொருந்தியுளதென்பதை விசத வாக்சிகாமணியாகிய மணவாளமாமுனிகள் தாமருளிய ஸ்ரீவசன பூஷண வியாக்யானத்தில் அருளிச்செய்துள்ளார். அதுவருமாறு:—

"தீர்க்கசரணாகதியான திருவாய்மொழிபோலே, த்வய விவரணமாயிருக்கும்; எங்ஙனேயென்னில்; திருவாய்மொழியில், முதல் மூன்று பத்தாலே § உத்தரகண்டார்த்தத்தையும் மேல் மூன்று பத்தாலே † பூர்வகண்டார்த்தத்தையுஞ் சொல்லி மேல் நாலுபத்தாலும் அவ்வுபாயோபயோகியான குணங்களையும், ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடியையும், அவனோடு தமக்குண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையும், தாம் பிரார்த்தித்தபடியே பெற்றபடியையும் ப்ரதிபாதிக்கையாலே ததநுரூபார்த்தங்களைச் சொல்லித் தலைக்கட்டினப்போலே" என்பதாம்.

இங்குத் திருவாய்மொழியில் இன்னின்னபத்தால் த்வயத்தின் பூர்வோத்ரவாக்யங்களின் பொருள் விவரிக்கப்பட்டதென்பது தொகுத்துரைக்கப்பெற்றது. இனி, இத்தொகுத்துரை விரித்துரைக்கப்பெறும்:— திருவாய்மொழியில் முகற்பத்து முதற்றிருவாய்மொழியின் முதற்பாட்டில் "தொழுதெழு" என்றதனாலும், இரண்டாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழியில் "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றதனாலும், மூன்றும்பத்து மூன்றாந் திருவாய்மொழில் "ஒழிவில்காலமெல்லாம்" என்றதனாலும் த்வயத்தின் உத்தரவாக்யமாகிய "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்பதின் பொருள் விவரிக்கப்பெறுகிறது. பிராட்டியும் பெருமானும் சேர்ந்துள்ள இருவருமான சேர்த்தியில் கைங்கர்யத்தையாசிப்பதென்பதே இந்த உத்தரவாக்யத்தின் கருத்துப்பொருளாம்.

---

§ உத்தரகண்டார்த்தமாவது 'ஸ்ரீமதே நாராயணாய நம:' என்பதின் அர்த்தமாம்.

† பூர்வகண்டார்த்தமாவது 'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்பதின் அர்த்தமாம்.

இங்கு ஆழ்வார் தம் திருவுள்ளத்தைநோக்கி 'எம்பெருமானுடைய திருவடிகளை நீ தொழுதற்கு முற்படுவாயாக' என்று அருளிச்செய்ததினுல் த்வயத்தின் உத்தரவாக்யத்தின் பொருளாகிய கைங்கர்யம் தோற்றுவாய் செய்யப்பட்டது. "தொழுதெழு" என்றதனுல் கைங்கர்யம் குறிப்பிடப்பட்டதாமோவெனின்; தொழுகையும் காயிகரூபகைங்கர்யத்துள் ஒன்ருதலால் கைங்கர்யமாமென்க. ஆழ்வார் தம் திருவுள்ளத்தைக் குறித்து இங்ஙன மருளிச்செய்ததினுல் எம்பெருமான் திருவடிகளைத் தொழுவதே ஆத்மாவுக்குப் பரமப்ரயோஜனமென்பது வெளியாயிற்று. இதனுல் த்வயத்தின் உத்தரவாக்யத்தில் ஆய என்ற சதுர்த்தியின் (நான்காம் வேற்றுமையின்) பொருள் குறிப்பிடப்பட்டது.

இக்கைங்கர்யம் 'இவ்வாறு செய்தல்வேண்டும்' என்பதை "எம்மாவீட்டுத்திறமும் செப்பம்" என்றதனுல் வெளியிடுகிருர்.— எம்பெருமான் ஆழ்வாருக்கும் அவர் சம்பந்தமுடையாருக்கும் மோக்ஷங்கொடுப்பதாக முற்பட்டபோது இவர் எம்பெருமானை நோக்கி 'தேவரீர் அடியேனுக்கு மோக்ஷங்கொடுப்பதாகத் திருவுள்ளம்பற்றினுல் இவ்வாறு தந்தருளவேண்டும். அஃதாவது:– 'உனக்கு மோக்ஷங்கொள்' என்று எனக்காகக் கொடுப்பதன்றிக்கே 'நமக்காகக்கொள்' என்று தேவரீர் உகக்கும்படி தந்தருளவேண்டும்; என்பதாம். நம்பிள்ளை ஈட்டிலும் "முக்தனுய் நிரதிசயசுகாநுபவத்தைப் பண்ணவுமாம்; ஆத்மப்ராப்தியைப்பெறவுமாம்; ஆத்மவிநாசமேயாகவுமாம்; நரகாநுபவம்பண்ணவுமாம்; இவற்றிலெனக்கொரு நிர்ப்பந்தமில்லை; உனக்காய்வருமன்று இவையித்தனையும் வரவுமாம்; எனக்காய்வருமன்று இவையித்தனையும் வேண்டா; ஆனபின்பு தேவரீருக்குறுப்பாமாமிதுவே எனக்கு வடிவாம்படி பண்ணியருளவேண்டும் என்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கரிக்கிருர்." என்று அருளிச்செய்தார். இதனுல் உத்தரவாக்யத்திலுள்ள நமப்பதத்தின் பொருளுரைக்கப்பட்டது. இந்த நமப்பதம் கைங்கர்யப்பிரார்த்தனையைக் குறிப்பிடுகிற 'ஆய' என்ற சதுர்த்தியின் பின்னுள்ளதாகையால் கைங்கர்ய விரோதிநிவர்த்தியைக்காட்டும். கைங்கர்ய விரோதியாவது தன் மகிழ்ச்சிக்குரித்தாகச்செய்வது. இவ்

விஷயம் இந்த * "எம்மா வீடு" என்ற திருவாய்மொழியால் தெளிவாகவுரைக்கப்பெற்றதினுல் இது நமப்பதத்தின் விவரணமாமென்றறியத்தக்கது.

இக் கைங்கர்யத்தை ஒரு காலத்திற்செய்து பின்பு விட்டு விடத்தக்கதில்லை. ஆத்மா நித்யவஸ்துவாதலாலும், எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பதே இதற்கு முக்ய லக்ஷணமாகையாலும் இக்கைங்கர்யமும் நித்யமாகும். ஆதலால் ஒழிவின்றி எப்பொழுதும் இக்கைங்கர்யம் செய்துவரவேண்டுமென்பதை,

"ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி
வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்
தெழிகுரலருவித்திருவேங்கடத்து
எழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே."

என்ற திருவாய்மொழியால் தெளிவாக அருளிச்செய்தார். நாராயணபதார்த்தத்தின் தெளிவுரையைத் திருவாய்மொழியில் பலவிடங்களிலும் காணலாம். இதனுல் திருவாய்மொழியின் முதல் மூன்றுபத்தால் த்வயத்தின் உத்தரவாக்யத்தின் விவரணமுரைக்கப்பட்டது. இனி, மேல் மூன்றுபத்தால் த்வயத்தின் பூர்வவாக்யத்தின் விவரண முரைக்கப்பெறும்:—

பெரிய பிராட்டியாரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப்பற்றுவதென்பதே பூர்வவாக்யத்தின் கருத்துப்

---

* "எனக்கேயாட்செய்யெக்காலத்துமென்றென்
மனக்கேவந்திடைவீடின்றிமன்னி
தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே
எனக்கேகண்ணனையான்கொள்சிறப்பே."

என்ற இது, "எம்மா வீடு" என்ற திருவாய்மொழியின் நான்காம் பாட்டு. இது, இத்திருவாய்மொழியின் உயிர்நிலையான பாசுரம். இதன்பொருளாவது எக்காலத்திலும் எனக்கே ஆட்செய்யென்றருளிச்செய்து என் மனவில்வந்து இடைவிடாதபடி நின்று நித்யவாஸஞ்செய்து பிறர்க்கும், எனக்கும், தனக்குமெனக்குமன்றிக்கே தனக்கேயாக என்னையங்கீகரிக்கும் இதுவே எனக்குப் பொருத்தமாகக் கண்ணனையான் அபேக்ஷிக்கும் சிறந்த பிரயோஜனமாமென்பதாம்.

பொருளாம். நான்காம்பத்து முதற்றிருவாய்மொழியில் "திருநாரணன் தாள்" என்றதனுலும், ஐந்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழியில் "ஆறெனக்கு நின்பாதமே சரணுகத்தந்தொழிந்தாய்" என்றதனுலும், ஆறும்பத்து பத்தாந்திருவாய்மொழியில் "அகலகில்லேன்" என்றதனுலும் த்வயத்தின் பூர்வவாக்யத்தின் விவரணமுரைக்கப் பெற்றது. ஆழ்வார் ஐசுவர்யமே புருஷார்த்தம் என்றிருப்பாரை நோக்கி,

ஒருநாயகமாயோடவுலகுடனுண்டவர்
கருநாய்கவர்ந்தகாலர்சிதகியபானையர்
பெருநாடுகாணவிம்மையிலேபிச்சைதான்கொள்வர்
திருநாரணன்தாள்காலம்பெறச்சிந்தித்துய்மினோ.

என்று உபதேசித்தார். இங்குச் சக்கரவர்த்தியா யிருப்பவனும் இம்மையில் பிச்சையெடுக்கும் நிலையடைவான் ஆதலால் எம்பெருமானையடைந்து உஜ்ஜீவிப்பீராக என்கிறவிடத்தில் "திருநாரணன் றாள்" என்ருர். இதனுல் த்வயத்தின் பூர்வவாக்யத்தில் "ஸ்ரீமந் நாராயண சரணௌ" என்ற பதங்களின் பொருள் வெளியாயிற்று. எம்பெருமான் திருவடிகளையடைவதே நிலைநின்ற புருஷார்த்தமாம் என்பதை வற்புறுத்த ஐசுவர்ய புருஷார்த்தம் நிலையற்றதென்று எடுத்துக்காட்டியதே பூர்வவாக்யத்திற் கூறப்படாத விசேஷமாம்.

இத்தகைய நிலைநின்ற புருஷார்த்தமாகிற எம்பெருமான் திருவடியை யடைவதற்குச் சாதனம் அவனுடைய திருவடியேயாகுமென்பதை,

"ஆறெனக்குநின்பாதமேசரணுகத்தந்தொழிந்தாயுனக்கோர்கை
மாறுநானொன்றிலேனெனதாவியுமுனதே."

என்றதனுல் வெளியிட்டார். இதனுல் த்வயத்தின் பூர்வவாக்யத்திலுள்ள 'சரணம்' என்பதின் பொருளுரைக்கப்பட்டது. இங்கு ஆழ்வார் எம்பெருமானைநோக்கி எனக்குபாயம் உன்திருவடியேயாம்படி பண்ணித்தந்தாய் இங்ஙனமுபகரித்தவுனக்கு ஒரு வகையாலும் பிரத்யுபகாரம் செய்தற்கு ஒன்றுமில்லாதவனுக விருக்கிறேன் என்று அருளிச்செய்ததனுல் இதுசரண சப்தார்த்தத்தின் விவரணமாயிற்றென்பது தெளிவாம்.

இங்ஙனம் எம்பெருமான் திருவடியை அடைதற்கு அவன் திருவடிகளே உபாயமாகப்பற்றுமவன் இன்னயோக்யதையுடையவனுயிருத்தல்வேண்டுமென்பதை,

அகிலகில்லேனிறையுமென் றலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில்புகழாயுலகமூன் றுடையாயென்னையாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பந்திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாவடியேனுன் னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே

என்றதனுல் அருளிச்செய்தார். இதனுல் த்வயத்தின் பூர்வவாக்யத்திலுள்ள 'ப்ரபத்யே' என்பதின் பொருளுரைக்கப்பட்டது. த்வயத்தில் எம்பெருமானையடைகின்றவனுடைய ஸ்வரூபம் இன்னதென்று விளக்கவில்லை. இங்கு "புகலொன்றில்லா வடியேனுன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அதிகாரியின் இயல்பு தெளிவாகவுரைக்கலாயிற்று. இதனுல் தன் வெறுமையை முன்னிட்டுக்கொண்டிருக்கிற சேஷத்வஜ்ஞானமுடையவனே எம்பெருமானை உபாயமாக வரித்தற்குரியவனென்பது வெளியாகிறது. இப்பாட்டின் ஈற்றடியே இங்கு முக்யப்பொருளாக் கொள்ளப்பட்டதென்பது ஒருபுறமிருக்க; இப்பாட்டு முழுமையும் ஆராய்ந்து பார்த்தால் த்வயார்த்தமனைத்தும் நிறைந்துள்ளதென்பதறியலாம். அது வருமாறு:—

'அலர்மேல்மங்கை' என்றதனுல் ஸ்ரீ என்பதன் பொருளும், 'அகலகில்லேன்' என்றதனுல் மதுப்பின்பொருளும், 'உறைமார்பா' என்றதனுல் பிராட்டியுடன் கூடியிருக்குமிருப்பு நித்யமாமென்ற பொருளும், 'நிகரில் புகழாயுலகமூன்றுடையா யென்னையாள்வானே, நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்றதனுல் நாராயண சப்தத்தின் பொருளும், 'புகலொன்றில்லாவடியேன்' என்றதனுல் பற்றுகிறேன் என்ற பயனிலைக்கு எழுவாய்ப்பொருளும், 'உன்னடிக்கீழ்' என்றதனுல் சரணௌ என்பதன் பொருளும், 'அமர்ந்து புகுந்தேனே' என்றதனுல் ப்ரபத்யே என்ற வினைமுற்றின் பொருளும் வெளியாயின

மேலும் பூர்வவாக்யத்தில் நாராயண சப்தத்தின் பொருளாகிய வாத்ஸல்ய ஸ்வாமித்வ, ஸௌசீல்ய, ஸௌலப்யமென்ற குணங்கள்

இந்தப் பாசுரத்தில் மிகவும் தெளிவாகவுரைக்கப்பட்டன. எவ்வா றெனின்; 'நிகரில் புகழாய்' என்றதனால் வாத்ஸல்யகுணம் வெளியா யிற்று. வாத்ஸல்யமாவது பசு தன்கன்றினுடைய அழுக்கை நாக்கி னால் போக்யமாகக் கொள்வதுபோல அடியாரின் குற்றங்களைக் குணமாகக் கொள்வதாம். நிகரில் புகழாய் என்பது ஒப்பற்ற கீர்த்தி யினையுடையாய் என்ற பொருளையுணர்த்துவதாயிருக்க இது, வாத் ஸல்யத்தைக்குறிப்பிடுமென்பது எவ்வாறு பொருந்துமெனில்; அப ராதமுடைய ஒருவனது அபராதங்களைப் பொறுத்து ஆதரிப்ப தற்கு வாத்ஸல்ய முக்யமாதலாலும், ஒருவனுடைய அபராதங்களை யெல்லாம் பொறுக்கும்படி புருஷகாரஞ்செய்கிற பெரியபிராட்டி யாரின் புருஷகாரத்வம் ஸித்திப்பதற்கு இந்தக்குணம் முக்யகாரண மாயிருப்பதாலும் மற்றக் குணங்களைக்காட்டிலும் இக்குணம் ஒப் பற்றதென்று சொல்லத் தடையில்லையாதலால் பொருந்துமென்க. 'உலகமூன்றுடையாய்' என்றதனால் ஸ்வாமித்வம் சொல்லப்பட்டது. ஸ்வாமித்வமாவது சொத்தையுடையவனாயிருத்தலாம். இந்தக் குணம் எம்பெருமானிடத்திற் குடிகொண்டிருப்பதால் அவன் அபராதமுடையாரின் அபராதங்களைப் பொறுக்கிறானென்பது முடி வாதலால் ஸ்வாமித்வகுணம் வாத்ஸல்ய குணத்திற்குக் காரணமா யிருக்குமென்றறியத்தக்கது. 'என்னையாள்வானே' என்றதனால் ஸௌசீல்யமுரைக்கப்பட்டது. ஸௌசீல்யமாவது அறப்பெரியான் தன் மேன்மையை ஆராயாமல் அறத்தாழ்ந்தவனோடு கலந்திருத்த லாம். ஆழ்வார் 'நீசனாகிய எனது சிறுமையை ஆராயாமல் என் னோடுகலந்து நின்று என்னையாதரித்தான்' என்று அநுஸந்தித்தன ராதலால் என்னையாள்வானே என்பது ஸௌசீல்ய குணத்தை யுணர்த்திற்றென்க. 'நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திரு வேங்கடத்தானே' என்றதனால் ஸௌலப்ய குணமுரைக்கப்பட்டது. ஸௌலப்யமாவது சுலபமாயிருத்தலாம். உயர்ந்தாரோடு தாழ்ந்தவ ரோடு மிகவும் சுலபமான அர்ச்சகபராதீனத்வத்துடன் எம்பெரு மான் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பதைக் காட்டிலும் சுலபமில்லையாதலால் 'திருவேங்கடத்தானே' என்றதனால் ஸௌலப் யம் குறிப்பிடப்பட்டதென்பது தெளிவாம்.

இதுவரையுமுரைத்ததினால் திருவாய்மொழியில் ஆறுபத்துக்களால் த்வயார்த்த விவரணமுரைக்கப்பட்டதென்பது வெளியிடலாயிற்று. இனியுள்ள நான்குபத்துக்களுள் ஏழாம்பத்து முகற்றிருவாய்மொழியில் "கடல்ஞாலங்காக்கின்ற, மின்னுநேமியினாய்" என்றதனால் எம்பெருமானுடைய ரக்ஷகத்வகுணத்தை வெளியிட்டார். ரக்ஷணசக்தி பிறரொருவரிடத்திலுமில்லை. இக்குணமுடையவனே ஸர்வேசுவரனாவான்; இவனை ஒழியப்பிறரிடத்தில் தமக்குப்பற்றில்லை என்பதை ஏழாம்பத்து முகற்றிருவாய்மொழியில் "உங்களோடெங்களிடையில்லையே" என்றதனால் அருளிச்செய்து அதன்மேல் ரக்ஷகனான எம்பெருமானே எல்லா உறவுமுறையுமாவான் என்பதை எட்டாம்பத்து இரண்டாந் திருவாய்மொழியில் "நாராயணன் நங்கள்பிரான்" என்றதனால் தெரிவித்தார் பின் ஆழ்வார் தாம் பிரார்த்தித்தபடி இஷ்டஸித்திபெற்று உஜ்ஜீவித்ததைக் குறித்துத்திருவாய்மொழி இறுதிப்பாசுரத்தில் "அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்" என்றதனால் அருளிச்செய்தார்.

திருவாய்மொழி த்வயத்தின் விவரணத்தை உரைக்கவந்தவிடத்துப் பூர்வவாக்யார்த்தத்தின் விவரணத்தை முற்கூறி அதன் பின் உத்தரவாக்யார்த்தத்தின் விவரணத்தைக் கூறவேண்டிய முறையை ஒழித்து முதன்மூன்றுபத்தால் உத்தரார்த்த விவரணமும், மேல் மூன்றுபத்தால் பூர்வார்த்த விவரணமுரைப்பது பொருந்துமோவெனின்; ஆத்மாவுக்கு இன்றியமையாதலக்ஷணம் எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பதாகும். இவ்வடிமைத்திறம் ஸித்திக்க வேண்டுமானால் அவன் விஷயமான கைங்கர்யஞ்செய்ய வேண்டும். இன்றேல் அவ்வடிமைத்திறம் ஸித்திக்காது. இதனால் ஆத்மசேஷத்வம் ஸித்திப்பதற்கு அவன் விஷயமான கைங்கர்யஞ் செய்தலே காரணமாமென்பது பெறப்படும். இந்தக் கைங்கர்யப் பிரார்த்தனையைத் தெரிவிப்பது த்வயத்தின் உத்தரவாக்யமாதலால் அந்த உத்தரார்த்த விவரண முற்கூறப்பட்டது. அதனால் பொருந்துமென்க.

இதனால் திருவாய்மொழி த்வயத்தின் விவரணமாய் நின்று தீர்க்க சரணாகதி என்று பெயர் வழங்கப்பட்ட விஷயம் விரித்துரைக்கப்பெற்றது.

108

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(88-ம் பக்கத்தொடர்ச்சி.)

9-வது அதிகாரம்.

இனி, புராணங்களைப்பற்றி விசாரிக்கப் புகுவாம். புராணங்கள் விஷயமாக இரண்டுவித அபிப்பிராயங்கள் ஏற்படுகின்றன. அவை:—1. நம் தேயத்தவர்கள் கருதுவதும், 2. இதர தேயத்தவர்கள் கருதுவதுமாம்.

நம்மவர் எல்லாப் புராணங்களும் ஒருவராலேயே இயற்றப்பட்டனவென்று கருதுகிறார்கள். அயல் தேயத்தவர்கள் ஒவ்வொரு புராணமும் ஒவ்வொருவராலேயே செய்யப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

பதினெண்புராணங்களும் ஒருவராலேயே இயற்றப்பட்டிருக்க முடியாதென்று சில பிரமாணங்கள் காட்டுவோம். ஒரே மனிதன் எவ்விதம் கையெழுத்து ஐந்துவிதமா யெழுதமுடியாதோ அது போல் ஒரே மனிதனின் ரசனையும் வெவ்வேறுவிதமாயிருக்க முடியாது. பதினெண்புராணங்களின் ரசனையும் வெவ்வேறுவிதமாயிருக்கிறது. விஷ்ணுபுராணத்தில் கூறிய விஷயங்கள் பாகவத புராணத்தில் வேறுவிதமாய்க் காணப்படுகின்றன. ஒரு மனிதன் ஓர் விஷயத்தைப்பற்றி வெவ்வேறு கிரந்தங்களில் வெவ்வேறுவிதமாக யெழுதியிருக்க முடியாது. ஆனல் ஒரு புராணத்தில் சொல்லப்பட்டவிஷயமே வெவ்வேறு புராணங்களிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணபகவானின் சரித்திரமானது பிரம்மபுராணம் பூர்வபாகத்திலும், விஷ்ணுபுராணம் 5-வது அம்சத்திலும், வாயுபுராணத்திலும், ஸ்ரீமத்பாகவதம் 10, 11-வது ஸ்கந்தங்

களிலும், பிரம்மவைவர்த்தபுராணம் 3-வது கண்டத்திலும் காணப்படுகிறது. இவ்விதமே பத்மபுராணத்திலும் வாமனபுராணத்திலும் சுருக்கமாக ஸ்ரீ கிருஷ்ணன் கதை சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வொரோவிஷயத்தின் வர்ணனையே மறுபடியும் ஒவ்வொரு புராணங்களிலும் வெவ்வேறுவிதமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஒருவரே பதினெண்புராணங்களைச் செய்திருந்தால் ஒரே விஷயத்தைக்குறித்துப் பல புராணங்களில் பரஸ்பர விரோதம் ஏற்படுவதெங்ஙனம்?

𑌆𑌖𑍍𑌯𑌾𑌨𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍈𑌃 𑌗𑌾𑌥𑌾𑌭𑌿𑌃 𑌕𑌲𑍍𑌪𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃।
𑌪𑍁𑌰𑌾𑌣𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃॥
𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌵𑍍𑌯𑌾𑌸𑌶𑌿𑌷𑍍𑌯𑍋𑌽𑌭𑍂𑌤𑍍𑌸𑍂𑌤𑍋𑌵𑍈𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌃।
𑌪𑍁𑌰𑌾𑌣𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌦𑌦𑍌 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃।
𑌸𑍁𑌮𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌚𑌾𑌶𑍍𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌯𑍁𑌃 𑌸𑌾𑌂𑌶𑌪𑌾𑌯𑌨𑌃।
𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌿𑌕𑌾𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌤𑌿𑌸𑍃𑌣𑌾𑌂 𑌮𑍂𑌲𑌸𑌂𑌹𑌿𑌤𑌾॥
𑌅𑌕𑍃𑌤𑌵𑍍𑌰𑌣𑍋𑌽𑌥𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑌿𑌃 𑌷𑌟𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌃 𑌤𑌸𑍍𑌯𑌚𑌾𑌭𑌵𑌨𑍍।
𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑌿𑌃 𑌸𑌾𑌂𑌶𑌪𑌾𑌯𑌨𑌃॥

புராணார்த்தங்களறிந்த வேதவியாசரானவர் ஆக்யாநம் உபாக்யானம் காதாகல்பசுத்தி மூலமாக புராணஸம்ஹிதையைச் செய்தார். லோமஹர்ஷனின் புதல்வன் வியாசருடைய சிறந்த சீடனாகவிருந்தான். வியாசமாமுனி அவனுக்குப் புராண ஸம்ஹிதையையளித்தார். சுமதி, அக்நிவர்ச்சஸ், மிதராயு, ஸாம்சபாயநர், அகிருதவிருணர், ஸாவர்ணி இவ்வறுவர்களும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்கள். இவர்களுள் காசியபர், ஸாவர்ணி, ஸாம்சபாயநர் இவர்கள் ரோமஹர்ஷணிகா என்கிற மூலசம்ஹிதையிலிருந்து மூன்று சம்ஹிதைகள் வெளியிட்டார்கள்.

மறுபடியும் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது.—

𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌾𑌰𑍁𑌣𑌿𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑍍𑌚 𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑌿𑌰𑌕𑍃𑌤𑌵𑍍𑌰𑌣𑌃।
𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌯𑌨𑌹𑌾𑌰𑍀𑌤𑌃 𑌷𑌡𑍍𑌵𑍈𑌪𑍌𑌰𑌾𑌣𑌿𑌕𑌾 𑌇𑌮𑍇॥
𑌅𑌧𑍀𑌯𑌤 𑌵𑍍𑌯𑌾𑌸𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 𑌮𑌤𑍍𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌤𑍍।

ஏகைகாமஹமேதேஷாம் ஶிஷ்யஸ்ஸர்வாஸ்ஸமத்யகாம் ॥
காஶ்யபோஹம் ச ஸாவர்ணீ ராம ஶிஷ்யோऽக்ருதவ்ரண: ।
அதீமஹி வ்யாஸஶிஷ்யாச் சத்வாரோ மூலஸம்ஹிதா ॥
பாகவத. (12 ஸ்கந்த) × 3 (அ) 4 × 6.

த்ரய்யாருணி, காஶ்யபர், ஸாவர்ணி, அகிருதவிரணர், ஶிம்ஶபாயனர், ஹாரிதர் இவ்வறுவர்களும் பௌராணிகர்கள்.

வாயுபுராணத்தில் பெயர்கள் வேறுவிதமாகக் காணப்படுகின்றன.

ஆத்ரேயஸ்ஸுமதிர்தீமான் காஶ்யபோஹம் க்ருதவ்ரண: ।

மறுப்படியும் அக்நிபுராணத்தில்.—

ஸூதவ்யாஸாச் ச புராணாதி ஸூதோ வை லோமஹர்ஷண:
ஸுமதிஶ்சாக்நிவர்ச்சாஶ்ச மித்ராயுஶ் ஶாம்ஶபாயந: ॥
க்ருதவ்ரணோऽத ஸாவர்ணி: ஶிஷ்யாஸ்தஸ்யாந்வவாபவந் ।
ஶாம்ஶபாயநாதயஶ்சக்ரு: புராணாநாஞ்ச ஸம்ஹிதா ॥

இவ்விதமான வசனங்களிலிருந்து பதினெண்புராணங்கள் யாவையும் வியாசரொருவரே யியற்றினரென்று கொள்ளமுடியவில்லை, வேதவியாசரின் சிஷ்யர்கள் பிரசிஷ்யர்கள் புராணஸம்ஹிதையை யியற்றினர்கள். அது இப்பொழுது பிரசாரத்திலில்லை. தற்காலத்திலவை பிரசாரத்திலிருக்கின்றனவேனும் அவை எக்காலத்தில் யாராலியற்றப் பட்டனவென்று சொல்லமுடியாது.

இனி, ஐரோப்பியர்களின் அபிப்பிராயத்தைச் சற்றுகவனிப்போம். ஒவ்வொரு புராணமும் ஒவ்வொருவர்களாலேயே யியற்றப் பட்டது. தற்காலத்தில் காணப்படும் புராணங்களெல்லாம் ஸம்க்ஷேபங்கள். அவைகள் வெவ்வேறு காலத்தில் செய்யப்பட்டனவென்பது ஐரோப்பியர்களின் கொள்கை.

வாஸ்த்தவத்தில் ஒரு புராணத்திற்கண்ட எல்லாவிருத்தாந்தங்களும் ஒருவராலேயே செய்யப்படவில்லை. தற்காலத்தில் பிரசாரத்திலிருக்கும் புராணங்கள்யாவும் சங்கிரகங்களே. அவைகள் வெவ்

வேறு காலங்களிலியற்றப்பட்டன. புராணமென்ற பத்ததிற்குப் பழமையானதென்பது பொருள். இச்சொல் முன்பு நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லும் கிரந்தமெனப் பின்பு பொருள் பெற்றது. வேத்திலும் புராணமிருக்கிறது. மத்பத (ய) ப்பிராமணத்திலும் கோபத (ய) ப்பிராமணத்திலும், ஆஸ்வலாய சூத்திரத்திலும், அதர்வண ஸம்ஹிதையிலும், பிரகதாரண்யகத்திலும், சாந்தோக்யோபநிஷத்திலும், மகாபாரதத்திலும், இராமாயணத்திலும், மானவ தர்மசாஸ்திரத்திலும் புராணமெனப் பெயர்வாய்ந்த சரித்திரக்கதைகள் காணப்படுகின்றன. அதிப்பிராசீன காலத்திலும் பாரதவர்ஷத்தில் எழுத்து எற்பட்டிருந்தபோதிலும் எல்லாக்கிரந்தங்களும் எழுதப்படவில்லை. வாய்மொழியாகவே யியற்றப்பட்டும் கற்பிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வந்தன. பிறகு இந்தப் பிராசீன கதைகள் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒவ்வொரு புராணமாகத் தொகுக்கப்பட்டன. வேத ராசியானது எவ்விதமாய் ஆதியில் ஒன்றாயிருந்து பிறகு வேதவியாசரால் ரிக், யஜுஸ், ஸாம, அதர்வண என்று வெவ்வேறாக வகுக்கப்பட்டதோ அவ்விதமாகவே ஒன்றாயிருந்த புராணமும் வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டது. வியாசரென்பது காரணப்பெயர். வேதவியாசரின் உண்மைப்பெயர் கிருஷ்ணத்வைபாயனர்.

சகலபுராணங்களும் ஒரே சமயத்தில் ஒருவராலேயே தொகுக்கப்பெறவில்லை யென்பதற்குப் பிரமாணங்கள் புராணங்களின் மத்தியிலேயே காணப்படுகின்றன. எவர் பிராசீன பௌராணிக விருத்தாந்தங்களைத் தெரிந்துகொண்டு ஒருங்குசேர்த்து கிரந்தரூபமாயியற்றினாரோ அவரே வியாசரெனப் பெயர்பெற்றார். இதனாலேயே வியாசரெனும் பெயர்பெற்று அநேகம்பேரிருந்தார்களென்று சொல்லப்படுகிறது. வேதவிபாகம் செய்தவர் வியாசர் மகாபாரதமியற்றியவர் வியாசர். பதினெண்புராணம் எழுதினவர் வியாசர். வேதாந்த சூத்திரந்தொகுத்தவர் வியாசர். பாதஞ்சலதர்மனத்துக்குப் பாஷ்யம் எழுதியவர் வியாசர். இவர்களை வியாசரெனப்பெயர் பூண்ட ஒருவரே யெனச்சொல்லவிடமில்லை. இக்காலத்திலும் அநேகர்களும் வியாசரெனப்பெயர் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக ஹரே கிருஷ்ண வியாசர் அம்பிகா தத்தவியாசர் முதலியன.

கிருஷ்ணத்வையாயநரே முதலாவதாக புராணஸங்கானம் செய்தவர். வியாசரெனப்பெயர்வாய்ந்த எவரெவர் எந்தக்காலத்தில் எந்த எந்தப்புராணம் செய்தவர் எனக்கூற முடியவில்லை. ஐரோப்பியர்கள் புராணங்களெல்லாம் இற்றைக்கு 1000 வருடங்களுக்குமுன் முதல் பிற்காலத்தி லியற்றப்பட்டன வென்றபிப்பிராயங்கொள்ளுகிறார்கள்.

இக்கொள்கை முற்றிலும் பிசகென்று வேறு பிரமாணங்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. எப்புராணங்களில் ஸ்ரீ கிருஷ்ணன் கதை காணப்படவில்லையோ அவைகளைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியதிப்பொழுது நமக்கவசியமில்லை. எவைகளில் கிருஷ்ண சரிதம் சொல்லப்பட்டுளதோ அவைகளுக்குள் பிரம்மம், விஷ்ணு, பாகவதம், பிரம்மவைவர்த்தம், இந்த நான்கு புராணங்களிலுமே கிருஷ்ண சரித்திரம் விரிவாய்க் காணப்படுகிறது அவைகளின் நடுவில் பிராம்மபுராணத்திலும் விஷ்ணுபுராணத்திலும் ஒரேவிதமாய்க் கிருஷ்ண கதையிருக்கிறது.

இனி, ஹரிவம்சத்தைப்பற்றியும் சற்று விசாரிப்போம்.

10-வது அதிகாரம்.

(ஹரிவம்சம்)

மகாபாரதம் சொல்லியபிறகு உக்கிரவஸ் என்பவர் ஸௌதி ஸௌநகர் முதலிய ரிஷிகளின் வேண்டுகோளால் ஹரிவம்சத்தையுரைத்தார். ஆகையால் இக்கிரந்தம் மஹாபாரதத்திற்குப் பிற்பட்டது. எவ்வளவு காலத்திற்குப் பிற்பட்டதென்று நிச்சயித்தல் இன்றியமையாதது. மஹாபாரதத்தின் பதினெண் பர்வங்களிலும் எவ்விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று அட்டவணையாக ஆதி பர்வம் பர்வசங்கிரகாத்தியாயத்திற் சொல்லப்பட்டதோ அவ்விதமே ஹரிவம்சத்திற் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு அட்டவணை அக்கிரந்தத்தில் காணப்படவில்லை ஹரிவம்சத்தில் தற்காலத்தில் மூன்று பர்வங்கள் காணப்படுகின்றன. ஹரிவம்சபர்வம், விஷ்ணு பர்வம், பவிஷ்யபர்வம் என்றவைகளின் பெயர். இந்த மூன்று பர்வங்களும் சேர்ந்து 16000 சுலோகங்களுக்குமேல் காணப்படுகின்றன.

மஹாபாரதத்தில் ஹரிவம்சத்தின் ஹரிவம்சபர்வம், பவிஷ்யபர்வம் இவ்விரண்டு பர்வங்களின் பெயர்மாத்திரம் கூறப்பட்டிருக்கிறது. விஷ்ணு பர்வத்தின் பெயர்கூறப்படவில்லை. விஷ்ணுபர்வம் பிரக்ஷிப்தமென்று கொள்ளப்பொருந்தும். மஹாபார்தத்திற்கு எவ்வளவு காலத்திற்குப் பிறகு ஹரிவம்சம் இயற்றப்பட்டதென்று உறுதியாய்ச் சொல்லமுடியவில்லை. ஆனால் மஹாபாரதம், விஷ்ணு புராணம் இவைகளுக்குப் பின்பும், பாகவதபுராணம் பிர்ம்மவைவர்த்தபுராணம் இவைகட்குமுன்பும் இயற்றப்பட்டதென்று சில பிரமாணங்களினால் சொல்லமுடியும். யஜுர்வேத ஸம்ஹிதை ஐங்காவதத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைக்குறித்துச் சொல்லியிருக்கிற விருத்தாந்தம் அதிபிராசீனம். பிறகு ருக்வேதஸம்ஹிதை பத்தாவது மண்டலம் 95-வது சூக்தத்திற் காணப்படும் விருத்தாந்தம். அதன்பிறகு மஹாபாரதம். பின்பு டாத்மம் முதலிய புராணங்களில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சரித்திரம் காணப்படுகிறது. இவைகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ண பகவான் சரித்திரத்தின் உண்மையை ஆராய்வோம்:—

இச்சரித்திரத்தின் சம்பவங்கள் ஆதியில் சிறிதாயிருந்து பிறகு பெரிதாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. முதலில் மஹாபாரதம், பிறகு விஷ்ணுபுராணத்தின் 5 அம்சம், பிறகு ஹரிவம்சம், அதன் பிறகு பாகவதம் இவைகளில் கிருஷ்ண சரித்திரத்தின் அம்சங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அதிகமாகக் கற்பிக்கப்படுகின்றன. எந்தக் கிரந்தத்தில் அமௌலிக, நைஸர்க்கிக, உபந்யாஸபாக விஷயங்கள் அதிகமாகக் காணப்படுகின்றனவோ அவைகள் பிராசீனமானவையல்ல. பிராசீனக் கிரந்தங்களில் ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தைப் பற்றி எவ்விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைக் கொண்டே இந்தச் சரித்திர விமர்சம் செய்வோம்.

தொடரும்.

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமீ எழுதுவது.]

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாஜச்ரவஸ் தம்முடைய ஆச்ரமத்திற்குச்சென்று பலவாறு கருதத்தொடங்கினர். அவை.— யாகம் பூர்த்தியுற்ற பிறகு நாம் யாகதெக்ஷிணை வழங்கிக்கொண்டிருந்தகாலத்தில் நம்முடைய குமாரனும் முக்ய சிஷ்யனுமிருக்கின்ற நசிகேதஸ் 'என்னை எவருக்குத் தெக்ஷிணையாகக் கொடுக்கப்போகின்றீர்' என்று பலமுறை வற்புறுத்தி ஏன் கேட்கவேண்டும்? அந்தோ! அவன் ஒருபோதும் ஒருவிதமான குற்றமும் செய்யாதவனன்றே! நாம் இதுகாறும் அவனிடத்தில் மிகுந்த விசுவாசத்தைச் செலுத்திச் சிஷ்யர்கட்குள் முதன்மையுற்றவனுகப் பாவித்து வந்தோமல்லவா. அறியாமையால் மிகுந்த கோபமுண்டாகி 'உன்னை யமனுக்குத் தெக்ஷிணையாகக் கொடுத்திருக்கிறேம்' என்று கடினமான சொல்லைக் கூறினேம். இந்தக் கடினவுரை நம்மிடத்தில் தோன்றுவதற்குக் காரணந் தெரியவில்லை. ஆனலும் நமது பூரணமான அநுக்ரஹத்தோடுகூடிய நசிகேதஸ்ஸுக்கு நம்மறியாமையாலுண்டான வார்த்தையானது அவன் பலனடைதற்குக் காரணமாயிருக்குமென்று தோன்றுகிறது.

முற்காலத்தில் தசரதன் புத்திரப்பேறில்லாமல் பரிதபித்துக் கொண்டிருந்தான். இவன் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அப்பொழுது ஓர் தடாகத்தில் சப்தமுண்டானதை 'இது மிருகத்தின் ஒலியோ' என்று சப்தவேதி என்ற பாணத்தைப் பிரயோகித்தான். அது ரிஷி புத்திரன்மீது பட்டு அவன் உயிர் துறந்ததையறிந்த மஹரிஷி கோபமுற்று 'நீயும் உனது புத்திரனுடைய பிரிவினல் உயிர் துறப்பாய்' என்று சாபந்தந்தார். அந்தச் சாபமே புத்திரப்பேறில்லாது கவலையுற்றிருந்த தசரதனுக்குக் கவலை ஒழி

தற்குக் காரணமான அநுக்ரஹரூபமன்றோ! அதுபோல நம் கோபமொழியும் நசிகேதஸ்ஸுக்கு நன்மையுண்டாக்குமென்று நினைக்கிறேன். இதோ நசிகேதஸ்ஸும் வருகிறான்; அவன் முகத்தைப்பார்க்கும்போது மிகவும் உத்ஸாக முடையவனாகக் காணப்படுகிறான்; இங்கு யாது காரணம்பற்றி வருகிறானென்பது தெரியவில்லை. இவனைக் கடினமான வார்த்தைகளால் தள்ளிவிட்டு மறுபடியும் இவன் முகத்தைப்பார்ப்பதற்கு லஜ்ஜையுண்டாகிறது ஆனாலும் இனி அவன் நம்மிடத்தில் என்ன சொல்லப்போகின்றானென்பதைக் கவனிப்போம்.

நசி— என்னருமைத் தந்தையே! தேவரீருடைய சொல்லினால் யான் யமதர்மனுக் குரியவனாகிவிட்டேன் ஆயினும் தேவரீருடைய பூர்ணமான அநுக்ரஹத்தையடைந்த எனக்கு எவ்விடஞ்சென்றாலும் ஒரு குறைவும் ஏற்படமாட்டாதென்பது நிச்சயம். யான் யமதர்மனிடஞ்சென்று அவனுக்குச் செய்யத்தக்க பணிவிடைகளென்னவென்று தெரியவில்லை. நான் புதியவனாக அவ்விடத்திற்குச் செல்வதால் ஒருசமயம் தவறுதலான கார்யத்தையுஞ்செய்துவிடநேரும். அதுகண்ட யமதர்மன் என்னை நிராகரிக்கும்பக்ஷத்தில் இந்த மஹத்தான யாகத்தின் பலனைத் தேவரீரடைதற்குத் தடைப்படுமல்லவா. அதையும் ஜாக்ரதையாயிருந்து காப்பாற்றிக்கொள்வது என்னுடைய கடமையாகும் இனித்தேவரீர் என் விஷயத்தில் பூரணமான அநுக்ரஹத்தைச் செலுத்தி யான் யமதருமனிடஞ்சென்று அவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளின் கிரமங்களையும் உபதேசித்தருளவேண்டும்.

வாஜ— நசிகேதஸ்ஸே! நான் கோபத்தினால் சொன்ன வார்த்தையை உண்மையாக நம்பவேண்டாம். ஒருக்ஷணமுங்கூட உன்னைவிட்டு நான் பிரிந்திருக்கமாட்டேன். இதை நீ அறிந்திருந்தும் என்னை இங்ஙனம் கேட்பது தகுதியோ? நான் உன்னை பூரணமனதுடன் யமனுக்குக்கொடுக்கவில்லை.

நசி— "ஔகிகாநாம் ஹி ஸாயஃநாம் அயஃம் ஸாமநாவஃநெ, ஷிணாம் வாநாயஃாணாம் வாவஷெயொஃா

நாயாவதி" "லௌகிகா நாம்ஹி ஸாதூநாம் அர்த்தம் வாகநு வர்த்ததே, ருஷிணும் புநராத்யாணும் வாசமர்த் தோநுதாவதி" என்றபடி பொருள் பெரியோருடைய சொல்லைப் பின்பற்றிச் செல்லுமாதலால் தேவரீருடைய வார்த்தை ஒருநாளும் வீணுகாது. தேவரீருடைய கோட் மொழியும் எனக்கு மேலான பதவியை அளிக்குமென்றே நம்புகிறேன்.

வாஜ—(யமலோகத்தின் வழியையும்; அவ்விடஞ்சென்று யமதரும னுக்குச் செய்யவேண்டிய பணிவிடை முறைகளையுங்கூறி) குழந்தாய்! நித்யமாயுள்ளதும், மேலானதுமாகிய மோக்ஷ மென்ற புருஷார்த்தத்தையடைதற்குக் காரணமான பிர்ம்ம வித்யையையும், அதன் ரஹஸ்யமான அர்த்தங்களையும் உலகினர் நன்குயறிந்து வாழ்வதற்கு நீ காரணமாய் விளங்கு வாய். உனக்கு நன்மையுண்டாகுக.

இரண்டாவது அத்யாயம்.

வைவசுதபட்டினத்தில் யமதருமராஜன் தன்னுடைய பரிவா ரங்களும், சுமதி முதலான மந்திரிமார்களும் புடைசூழக் கொலு வீற்றிருந்தான். அப்பொழுது முதல்மந்திரியாகிய சுமதியை நோக்கி மந்திரி! நீண்டகாலமாக நமது பட்டினத்திற்கு மிகுதியான ஜீவர் கள்வந்து தண்டனைக்குள்ளாவதாகத் தெரிகிறது. அதன் காரணம் யாது?

சுமதி—மஹாராஜ! சில தினங்கட்குமுன் யான் சித்திரகுப்த னேடு பேசிக்கொண்டிருந்த காலத்தில் அவன் முன்னினும் அதிகமான ஜீவர்கள் நமது பட்டினத்திற்கு வந்து மிகுந்த சிக்ஷைக்குள்ளாவதாகச் சொன்னுன். இதற்குக் காரணம் யாதாயிருக்கலாமென்று ஆராய்ந்தேன். அப்பொழுது என் மனத்தில் சில தோன்றின. அவை.— பூலோகத்தில் பல ஜீவர்கள் மோக்ஷ புருஷார்த்தத்தையும், அதற்குரிய சாத னங்களையும் அடியோடு மறந்து அர்த்தம், காமம் என்ற புருஷார்த்தங்களே முக்யமானவையென்றெண்ணி அவற்றிற்

குரிய சாதனங்களையே தேடித்திரிகிறார்கள். இதனால் அந்த ஜீவர்கள் வீட்டுலகையடையாமல் நம் பட்டினத்திற்கு மிகுதியாக வருகிறார்கள். அதனால் மஹாராஜாவாகிய உங்கட்கு அவர்களைக் கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தமும், நமது சேவகர்கட்கு ஒழிவில்லாத வேலைகளும் ஏற்படுகின்றன. இது நிற்க; இதோ ரௌரவாதி நரகங்களின் காவலர்களான துர்முகனும், தர்த்தரனும் வந்திருக்கிறார்கள். யாது காரணம்பற்றி வந்தார்களென்று தெரியவில்லை. விசாரித்து வரும்படி செய்கிறேன்.

தர்ம— மந்திரி! சிக்கிரம் விசாரித்து வரும்படி நம் சேவகனுக்குக் கட்டளையிடுவீர்.

மந்திரி— அடே! சேவகா! இதோ இருக்கின்ற துர்முகன் முதலான காவலர்கள் இங்கு வருதற்குக் காரணம் யாதென விசாரித்துவா.

சேவ— ஐயா! காவலர்களே! இங்கு நீங்கள் வருவதற்குக் காரணம் யாது?

காவலர்-ஐய! இனிவரும் ஜீவராசிகட்கு நாங்கள் காவல் புரிகின்ற நரகங்களில் இடமேயில்லை. ஆதலால் இனி அங்கு ஒரு ஜீவனையும் அனுப்பலாகாதென்பதை மஹாராஜா அவர்கட்குத்தெரிவித்துவிடுவீர்.

சேவ— சரி அப்படியே செய்கிறேன்.

மந்தி— விசாரித்து வந்தனையா?

சேவ— ஸ்வாமி! காவலர்களை விசாரித்தேன். அவர்கள் நரகத்தில் ஜீவராசிகள் சிறுதுமிடமில்லாமல் நிறைந்திருக்கிறார்கள். ஆதலால் இனி ஒரு ஜீவனை அவ்விடத்திற்கு அனுப்பி விடலாகாதென்று கூறினார்கள்.

தர்ம— மந்திரி! விசாரித்துவரும்படி செய்தீரா?

மந்தி— ஆம் விசாரித்தேன். நரகத்தில் இனிவருகிற ஜீவர்கட்குச் சிறுதுமிடமில்லையாம்.

தர்ம— மந்திரி! எனக்கு ஒரு தக்க சிஷ்யன் கிடைக்கும்பக்ஷத்தில் இந்த ஜீவராசிகளை இந்த நரகங்களினின்று மீளும்படி செய்து பூலோகத்திலுள்ள பெரும்பாலரான ஜீவர்களை இங்கு வரவொட்டாதபடி தடுப்பேன்; எவ்வளவோ காலமாகக் காத்திருந்தும் மோக்ஷோபாயமாகிய பிர்ம்ம வித்யையை உபதேசிப்பதற்கு ஒரு சிஷ்யனும் கிடைக்கவில்லை. இது, என்னுடைய துர்ப்பாக்யமேயாம்; என்செய்வேன்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(64-ம் பக்கத்தொடர்ச்சி.)

இது நிற்க; ஆராதனவிஷயம் நிரூபிக்கப்படுகிறது.— பகவத் ப்ரபந்நனுக்குப் பகவதாராதனம் ப்ரதாநம். குருபரம்பராராதநம் அப்ரதாநம். ஆசார்யநிஷ்டனுக்கு ஆசார்யாராதநம் ப்ரதாநம். பகவதாராதனம் ஆசார்யமுகோல்லாஸ ஹேதுவாக அநுஷ்டிக்கவேண்டுவதாகையாலே அப்ரதாநம். இதற்கு ப்ரமாணம்.— "உவாயொவெய ஹாவெந தமெவ ஶரணம் வ்ரஜெத், கம்மநீயஶ்ச வந்த்யஶ்ச கீத்தநீயஶ்ச ஸவ்வதா" "உபாயோபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத், கர்மநீயச்ச சந்த்யச்சு கீர்த்தநீயச்ச ஸர்வதா" என்று இப்படி பாஷ்யகாராபிமான நிஷ்டர்களுக்குப் பாஷ்யகாரருடைய நியமனுதீநமாக உபயவேதாந்த ப்ரவசனமும், அவரருளிச்செய்த நித்யத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட பகவதாராதநமும், பாஷ்யகாரருடைய ஸம்பந்த ஞாபகமாகையாலே ஆவசியகம். இது நிற்க; ஆழ்

வார்கள், ஆசார்யர்கள் இவர்களுடைய ஆராதனவிஷயத்தில் ப்ரமாணம் நிரூபிக்கப்படுகிறது.—

வைகுண்டநாதீயத்தில் நாராயண ஸம்ஹிதையில் "𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌶𑌠𑌕𑍋𑌪𑌾𑌦𑍀𑌨𑍍 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌃, 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨 𑌵𑌿𑌧𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌉𑌪𑌚𑌾𑌰𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃, 𑌮𑌤𑍍𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌮 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍, 𑌮𑌯𑌿 𑌪𑍂𑌜𑌾𑌧𑌿𑌕𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌤𑍍𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑌮𑍍" "மத்பக்தாந் சடகோபாதீந் பூஜயேத் வைஷ்ணவோத்தம:, மந்த்ரரத்ந விதானைச்ச உபசாரைச்ச ஸர்வச:, மத்ஸாந்நித்ய ஸதாதத்ர மமப்ரீதிகரம் சுபம், மயிபூஜாதிகம் வித்தி மத்ஸாயுஜ்ய மவாப்நுயாத்" என்று சொல்லப்பட்டுள்ளன. ஆகையால் இப்படி ஆழ்வார்கள் முதலானவர்களை ஆராதிக்கவேண்டியது அவசியமென்றும், அது பகவத் ஸாந்நித்யத்திற்கு ஹேதுவென்றும் சொல்லப்பட்டன. இப்படி திங்மாத்திரம் ஆசார்யவிஷயத்தில் நிரூபிக்கப்பட்டது.

ஆக, தத்வஹித புருஷார்த்தங்களில் தத்வம் ஸ்ரீமந்நாராயணனென்றும், பக்தி ப்ரபத்யாதிகள் ஹிதமென்றும், அவைகளில் அவாந்தரபேதமும், கைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அந்த கைங்கர்யத்தில் ஸ்வார்த்த பரார்த்தாதி பேதமும், இப்படியிருந்துள்ள அதிகாரிக்கு நித்யநைமித்திக கர்மங்கள் லோக ஸங்க்ரஹத்தை அநுஸரித்து அநுஷ்டிக்கவேண்டியதென்றும், அதனுலுண்டாகிற பகவந்முகோல்லாஸம் புருஷார்த்தமென்றும், இந்த அதிகாரிக்கு ஏற்பட்டிருக்கிற ஆசாரப்ரகாரங்களும் யதாமதி நிருபிக்கப்பட்டன.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(85-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, புருஷத்வரூப ஹேதுவைக்கொண்டு ஸர்வேசுவரனுக்குத் துக்கித்வம் இல்லையென்பதுபோல புருஷத்வரூப ஹேதுவைக் கொண்டு அவனுக்குச் சரீரமுமில்லையென்றுகொண்டால் வருங் குறைபாடெதெனின்; புருஷசப்தமானது சரீரவிசேஷ விசிஷ்ட வியக்தியைக்குறிப்பிடுமாதலால் புருஷத்வமிருந்தாலும் சரீரம்வேண்டா மென்று சொல்லும்போது புருஷசப்தவாச்யத்வம் சம்பவியாது. ஆதலால் சரீரமுள்ளவனுக்கே புருஷத்வமுண்டென்று ஒப்புக் கொண்டு தீரவேண்டுமென்பது முடிவாயிற்று. இது நிற்க; அநித்ய சரீரமுடைய ஒருவனாலே உலகமுண்டாக்கப்படுவதாகக் கொள்ளும் போது ஈசுவரனை ஒப்புக்கொள்ளாமல் ஜீவனாலே உண்டாக்கப் படுவதாகக்கொண்டால் வருங்குறைபாடு யாதெனின்; ஜீவனுக்கு ஜகத்வியாபாரமில்லையென்பது ப்ரமாணப்ரஸித்தமாதலால் ஜீவன் ஜகத்தையுண்டுபண்ணுகிறானென்பது பொருந்தாது. மேலும் இவ் விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சி இவ்விடத்திற்கு உபயோகமில்லை யாதலால் விடப்பட்டது.

உலகப்பற்றற்ற ஞானிகளுக்கு நெரிந்தசில்லோட்டிலும், துரும்பிலும் ஸர்வேசுவரன் நிறைந்து விளங்குகின்றானென்ற ப்ரதிபத்தியுண்டாகுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஸம்ஸாரிகளுக்கு ஸர்வேசுவரன் எங்கும் நிறைந்து விளங்குகின்றானென்ற உணர்ச்சியுண்டாவது அரிதாகுமாகையால் அழகியவடிவோடுகூடிய அர்ச்சையில் அவர்கட்கு விசேஷ ப்ரதிபத்தி தன்னடையே உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. "அர்ச்சாயாமேவ ஹரயே" (சாமன்ய ஜனங்கள் பகவதாராதனத்தை அர்ச்சையிலேதான் செய்யநினைப்பார்கள்.) என்ற ப்ரமாணமும் இதை வற்புறுத்தும். ஆகையால் அவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற நினைவுடைய ஞானிகளுக்கு அர்ச்சையில் விசேஷப்ரீதியில்லாமையை நிரூபித்

துரைப்பது அநிஷ்டமாகாது. ஆகையாலன்றோ ப்ரஹ்லாதன் 'ஸர்வேசுவரன் எங்கும் நிறைந்துள்ளான்' என்று பிரதிஜ்ஞை செய்து அதன்படியே ஒரு தூணிலும் எம்பெருமானை ஸாக்ஷாத் கரித்தான்.

இது நிற்க; ஸர்வேசுவரன் எங்கும் நிறைந்த வஸ்துவாயிருக்க ஆவாஹநத்தால் ஓரிடத்தில் அவன் ஸாந்நித்யம் செய்கிறானென்பது எவ்வாறு பொருந்துமெனின்; ஆவாஹநத்தால் ஸர்வேசுவரன் விக்ரஹத்தில் ஸாந்நித்யஞ்செய்கிறானென்றதனால் அவனுடைய வாத்ஸல்யாதிகுணம் வெளியாகிறது. தெரிந்தசில்லோட்டிலும் அவன் தங்கியிருக்கின்றான் என்றதனாலும் அவனுடைய வாத்ஸல்யாதி குணம் வெளியாகுமென்பது ப்ரத்யக்ஷத்தால் அறியவொண்ணாது. ஊகித்தறியவேண்டும். இவ்வாறன்றி அர்ச்சாவிக்ரஹத்தைக் கண்டமாத்திரத்தில் 'நாம் விரும்பியபடி இந்த விக்ரஹத்தில் எம்பெருமான் ஸாந்நித்யஞ்செய்கிறான்' என்று ப்ரதிபத்தி தன்னடையேயுண்டாவதற்கு ஸௌகர்யமுண்டு.

இந்தக்குணம் கண்ணபிரான் அர்ச்சுனனைநோக்கி 'என்னை ஒருவனையே தஞ்சமாகவடைவாய்' என்று தன்னைத் தொட்டுக் காட்டியதினால் நன்கறியலாம். ஆயினும் அந்த ஸந்நிவேசத்தை ஆரோபித்து அநுஸந்திக்கையாலே இந்த அர்ச்சாவதாரத்திலும் அந்தக் குணப்பிரகாசமுண்டென்னத் தட்டில்லை. இதுபற்றியே லோகதேசிகனும் "இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள்பக்கலிலே காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சலென்றகையும், கவித்தமுடியும். முகமும் முறுவலும், ஆஸன பத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும்." என்று அருளிச்செய்தார்.

இது நிற்க; ஆராதனப்பிரகாரணத்தில் இன்னின்ன வஸ்துக்களைக்கொண்டு எம்பெருமானை ஆராதிக்கவேண்டுமென்று சில திரவிய நியதி கூறப்பட்டுளது. இதனால் அவனுக்குச் சில திரவியங்களாகாவென்றும் தோற்றுகிறது. அவனுடைய ஸ்வரூபத்தை நிரூபித்துப் பார்த்தால் அவனுக்கு வேண்டாததொன்றுமில்லை

யென்றும் விளங்குகிறது. இது எவ்வாறு பொருந்துமெனின்; எம்பெருமானை ஆராதனைசெய்கின்றவனுக்குச் சிலதிரவியங்களில் இஷ்டமும், சிலவஸ்துக்களில் இஷ்டமின்மையுமுண்டாகக் காண்கிறோம். இங்ஙனமிருக்கின்ற இவனைக்குறித்துச் சிலதிரவியநியதி ஏற்பட்டதேயன்றிவேறல்ல. எம்பெருமானுக்கு எல்லா வஸ்துக்களும் பிரீதியுண்டுபண்ணத்தட்டில்லை. அவனும், பக்தர்களிட்டது அணுவேயாகிலும் அது எனக்குப் பெரிதாயிருக்கும்; சூடக்கொடுத்த பூவையும், காலலம்பக்கொடுத்த ஜலத்தையும் ஒக்கவுண்பேன் என்று அருளிச்செய்தான். நிலைநின்ற நெஞ்சுபடைத்த அடியார்கள் ஏதேனுமொருவகையால் ஏதேனும் ஒருகாரியத்தைச் செய்தாலும் எம்பெருமான் உகந்து அதைத் தலையாலே ஏற்றுகொள்வான் என்று அவனடியார்களும் உரைத்தார்கள்.

தொடரும்.

ஸ்ரீ:

விஜ்ஞாபநம்.

இராஜாங்கத்தைப்பற்றிய சிலவபிப்ராய பேதங்களும், சமயத்தைப்பற்றிய வேறுபாடுகளும், ஜாதியைநோக்கிய சிலகொள்கைகளும், ஒழுக்கத்தைப்பற்றிய பிரிவுகளும் தொண்டுதொட்டே யுள்ளன. இந்த வேறுபாடுகள் அக்காலத்திலுள்ள ஜனங்கட்கு விபரீத உணர்ச்சியை உண்டுபண்ணவில்லை. அக்காலத்தில் ஆன்றோர்களின சொல்லைக்கேட்டு நடப்பதே நன்முறையாம் என்ற கொள்கை ஜனங்கட்குத்திடமாக ஏற்பட்டிருந்ததே விபரீத உணர்ச்சி உண்டாகாமைக்கு முக்யகாரணமாகும். "முன்னோர் மொழிந்த முறைதப்பாமற்கேட்டு, பின்னோர்ந்து தாமதனைப்பேசாதே, தன்னெஞ்சில், தோற்றினதே சொல்லியிது சுத்தவுபதேசவர, லாற்றதென்பர் மூர்க்கராவார்" என்று பெரியாரருளிச்செய்தபடி இப்பொழுது மூர்க்கருடைய உபதேசம் உலகில் பரவிவருகின்றதினால் பெரும்பாலருக்கும் நாஸ்திக்யம் தலையெடுத்துவிட்டது. இதனால்

திவாகரத்தை ஆதரிப்பார்களும் அருகிவருகிறார்கள். இங்ஙனமாகில் திவாகரம் என்றும் நிலைபெறுவதரிதாமென்று கருதியே ஸம்ரக்ஷக, போஷக, ஜீவிதசந்தாதார்கள் சேர்க்கத் தலைப்பட்டோம். இதற்கிணங்கிய சில அபிமானிகள் ஸம்ரக்ஷராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்தார்கள். இதுவரை சேர்ந்துள்ள இந்த சந்தார்களைப்பற்றியும் பத்திரிகையின் வரவு செலவுகளைக் குறித்தும் சென்ற விபவஹு மார்கழிமாதத்தில் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற பத்திரிகையின் ஐந்தாம் வருஷக்கொண்டாட்டத்தில் அறிக்கையின் மூலமாகத் தெரிவித்தோம்.

இது நிற்க; இன்னும் பலர் ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவிதசந்தாதார்களாகவும், சாதாரண சந்தாதார்களாகவுஞ் சேர்ந்துபகரித்தால் ஊதியங்கிடைக்கும். இதைக்கொண்டு சில மாணக்கர்களைச் சீர்திருத்தி அவர்களால் ஸித்தாந்த ப்ரசாரஞ் செய்யும்படி செய்யலாம். ஆதலால் தயவுசெய்து எல்லாச் சந்தாதார்களும பல சந்தாதார்களைச் சேர்ப்பிக்க முற்படப் பிரார்த்திக்கிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

நன்கொடை.

நமது பத்திரிகை விஷயத்தில் மிகுந்த அபிமானமுள்ளவரும், உயிர்நண்பருமாகிய ஆலந்தூர் ஸ்ரீமாந் P கோபால்சாமி நாயுடவர்களின் புருஷகாரத்தால் ஷெயூர் ஸ்ரீமாந் P. லக்ஷ்மிநாராயணரெட்டியாரென்பவர் ஜீவிதசந்தாதாராகச் சேர்ந்துள்ளார். இவரும் வைஷ்ணவாபிமானத்திற் சிறந்தவராக விளங்குகின்றார். இவர் நீண்டவாழ்நாளைப்பெற்று ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயோடு செல்வ ஸ்ரீயுடனிருந்து வாழ்வுற எல்லாம்வல்ல எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ப. அ.